பக்கங்கள் 20+ 04

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி01 ஞாயிற்றுக்கிழமை 15.06.2024 | அதிர்வு 316

## பஸ் - லொறி மோதி விபத்து! பெண்ணொருவர் மரணம்!!

### 8 பேர் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று சிறிய ரக 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இலங்கையை வந்தடைந்தார் கீதா கோபிநாத்



சர்வதேச நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையை இன்று வந்தடைந்த பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள அவர், பொருளாதார சவால்கள் பிராந்தியத்துக்கான வாய்ப்புகள் குறித்தும், சர்வதேச நாணய நிதியம் இவற்றுக்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம் என்பது குறித்தும் அறிந்துகொள்வதற்காக அதிகாரிகள், சிவில் சமூகத்தினர், வர்த்தக சமூகத்தினருடன் பேச்சு 03▶



## 220 கிலோ கேரள கஞ்சா பொலிகண்டியில் மீட்பு!

யாழ். வடமராட்சி, பொலிகண்டிப் பகுதியில் 220 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் படகு ஒன்றும் வெளியிணைப்பு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுத் துறை மற்றும் விசேட அதிரடிப் படை இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை 03▶

## குடத்தனையில் வாள்வெட்டு! நால்வர் வைத்தியசாலையில்!!



யாழ். வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இரண்டு குழுக்குளுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், அது மோதலாக மாறி வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது. 03▶

## வடக்கில் வன்முறை அதிகரிப்பு! மே மாதம் வரை 301 பேர் கைது!!



வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை வழிப்பறி, கொள்ளை, கொலைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் 301 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 31ஆம் திகதி தீவிரமான குற்றச் செயல்களுக்காக 03▶



### தமிழ்க் கட்சிகள் - ஐக்கிய மக்கள் சக்தி

# வவுனியாவில் கூட்டாட்சி!

### இன்றைய சந்திப்பில் இணக்கப்பாடு

(கி.வசந்தன்)

வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கு இடையில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கிடையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் இன்று காலை இடம்பெற்றது. 02▶











## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலில் பங்கேற்ற தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையில் பொது நோக்கம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் இணைந்து ஒரு நிர்வாகத்தை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.



அந்தவகையில், வவுனியா மாநகர சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மாநகர மேயர் பதவியும், பிரதி மேயர் பதவி ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கு முதல் இரண்டு வருடங்களுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அடுத்த இரண்டு வருடங்களுக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் தவிசாளர் பதவி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், உப தவிசாளர் பதவி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உப தவிசாளர் பதவியை இரண்டு வருடங்களுக்குப் பகிர்வது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும், ஐக்கிய மக்கள் சக்தியும் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தவிசாளர் பதவியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்குத் தவிசாளர் பதவியும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், முத்து முகமது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் க.துளசி உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டனம்!

(கே. எ. ஹமீட் )

சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கை, கோட்பாடுகளுக்கு விதிவிலக்காக நடந்து கொள்ளும் வன்முறைக் கலாசாரத்தில் இருந்து தோன்றிய நெதன்யாகு அரசு, நேற்று முன்தினம் (13) ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மீது தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை நடத்தியமை முற்றிலும் நியாயமற்ற மிகவும் கீழ்த்தரமான செயலாகும்.

இது ஈரானை ஸ்திரமற்ற தன்மைக்கு உள்ளாக்கவும் மத்திய கிழக்கு மற்றும் பரந்துபட்ட அந்தப் பிராந்தியத்தில் குழப்பத்தை ஏற்படுத்தவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள ஓர் அப்பட்டமான முயற்சியாகும்.

இவ்வாறு ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டனம் வெளியிட்டுள்ளார். அந்தக் கண்டனத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இஸ்ரேலுக்கு முதுகெலும்பாக விளங்கும் அதற்கு ஆதரவான நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புடன் ஈவிரக்கமற்ற முறையில் செயல்படுத்



தப்பட்ட இந்தக் கொடூரமான செயலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான முழு உரிமையும் ஈரானுக்கு உண்டு. காசாவிலும், மேற்குக் கரையிலும், கிழக்கு ஜெருசலத்திலும் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டுவதற்குப் பொறுப்பான நெதன்யாகு மற்றும் அவரது இனப்படுகொலைக் கும்பலின் கொடூரமான போக்கை இயல்பானதாக ஆக்கி, அதனை கண்டு கொள்ளாது போல நடிந்து கொள்வது உலகளாவிய அமைதிக்கும், பாதுகாப்புக்கும் மிகவும் குந்தகமானதும், ஆபத்தானதுமாகும்.

ஈரானுக்கும் உலகின் எந்த நாட்டுக்கும் அணுசக்தியை அமைதியான முறையில் ஆராய்ந்து, அறிந்து உரிய முறையில் கையாள்வதற்கான உரிமை உண்டு.

ஈரான் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாகும், மேலும் அது சர்வதேச அணுசக்தி அதிகார சபையின் பாதுகாப்பு வழிமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.

எந்தக் காரணத்துக்காகவும், இராஜதந்திர ரீதியான பேச்சு வார்த்தைக்கான நெறி முறைகளை மீறி, எந்தவொரு நாடும் மற்றொரு நாட்டுக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக எவ்வாறான யுத்த நடவடிக்கையையும் தன்னிச்சையாக மேற்கொள்வதற்கு அறவே அதிகாரம் இல்லை.

முழு மத்திய கிழக்கையும் அணு ஆயுதங்கள் உட்பட பேரழிவை ஏற்படுத்தக் கூடிய பயங்கர ஆயுதங்கள் இல்லாத பிராந்தியமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்றும், பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் நாங்கள் கோருகின்றோம்.- என்றார்.

## பஸ் - லொறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறியொன்றின் மீது மோதி இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 8 பேரும் மதவாச்சி மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதவாச்சி, கடவத்கம, ஹல்மில்லவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 52 வயதுடைய பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

மதவாச்சி பகுதியில் இருந்து ரம்பாவ பகுதிக்குப் பயணித்த லொறியை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் முந்திச் செல்வதற்கு முயற்சித்த வேளை பஸ்ஸின் சாரதிக்கு பஸ்ஸைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையின் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியில் பயணித்தவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் தடவை என்பதால் அவரது இரண்டு நாள் விஜயம் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது.

இலங்கை விஜயத்தின் போது கீதா கோபிநாத் நிதி அமைச்சு, மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவை இணைந்து மாநாட்டில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் இலங்கை அதிகாரிகளுடனும், இலங்கை சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றுக்கு இடையிலான ஈடுபாட்டுடன் தொடர்புபட்டவர்களுடனும் கீதா கோபிநாத் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார்.

## 220 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இலங்கை இராணுவப் புலனாய்வுத் துறைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடல் மார்க்கமாகக் கொண்டு வந்த கேரள கஞ்சா 220 கிலோகிராமைச் சிலர் இறக்கிக் கொண்டிருந்த போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும், 220 கிலோகிராம் கேரள கஞ்சாவும், படகு மற்றும் அதன் வெளியிணைப்பு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட 220 கிலோகிராம் கேரள கஞ்சாவையும், படகு மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் என்பன வற்றைப் பருத்தித்துறை பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்தனர்.

## குடத்தனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நால்வர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

301 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த ஐந்து மாதங்களில் 80 கொள்ளைகளும், 4 வழிப்பறிகளும், 238 திருட்டுக்களும் இடம்பெற்றுள்ளன.

இதன்படி கொள்ளைகளில் 87 சந்தேகநபர்களும், வழிப்பறியுடன் தொடர்புடைய 2 சந்தேகநபர்களும், திருட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 212 சந்தேகநபர்களும் என மொத்தமாக 301 கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# லிப்ட் இடிந்து விழுந்ததில் இளைஞன் உயிரிழப்பு!

கொழும்பு – மொரட்டுவ பகுதியில், லிப்ட் இடிந்து விழுந்ததில் இளைஞனொருவர் உயிரிழந்துள்ளார்.

மொரட்டுவ பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 19 வயதுடைய இளைஞர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நான்கு மாடி ஹோட்டலின் மேல் தளத்துக்குப் பாத்திரங்களை எடுத்துச் சென்ற போது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. மேல் மாடியில் இருந்து அவர் மீது லிப்ட் சரிந்து விழுந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.



# மெதகம பகுதியில் மனைவியை சுட்டுக் கொலை செய்த கணவன்!

## பொலிஸ் விசாரணைகள் முன்னெடுப்பு

மெதகம பகுதியில், கணவன் ஒருவரால் மனைவி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மெதகம – பலகசர பகுதியில் நேற்று மாலை (14) இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்ப தராறு காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலகசர வீதிக்கு அருகே பெண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த பெண்ணின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்திருந்த பெண்ணை பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்திருந்த போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியசாலைதரப்பு அறிவித்துள்ளது.

மெதகம – மக்கந்தவின்ன பகுதியில் வசித்து வந்த 38 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கணவனால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணின் சடலம் தற்போது மெதகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலையை செய்த சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பொருளாதாரத்திலும் கல்வி நிலையிலும் முஸ்லிம் சமூகம் முன்னேறுதல் வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. சென்னையில் தெரிவிப்பு

கமுதி பஷீர் பைத்துல்மால் கல்வி அமைப்பால் கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வைக் கௌரவிக்கும் நிகழ்வும், அமைப்பின் தலைவர் கமுதி பீ. சம்சுதீன் தலைமையில், ராயபுரம் பாரூக் மஹாலில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

இங்கு உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல். ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவரான முனீரே மில்லத் பேராசிரியர் காதர் மொஹிதீன் அவர்கள் தொடர்பில் அறிந்திருகின்றேன். ஆனால் இன்று தான் அவரை நேரடியாக சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

இலங்கையில் முஸ்லிம்களை பெரும்பான்மை சமூகம் பல்வேறு சந்தர்ப்பங்களில் புறக்கணிப்புச் செய்தது. குறிப்பாக அரசியல் ரீதியான முடிவுகளை எடுக்கும் போது முஸ்லிம்கள் தொடர்பில் நேரடியாக பேசுவதற்கு சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டன. அதற்கான காரணம் முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியான கட்சி இல்லாமல் இருந்ததே. இந்த நிலையில் தான் ஸ்ரீலங்கா



முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.

எனது பிரதேசமான காத்தான்குடியில் அமைக்கப்பட்டுள்ள நூதன சாலை தொடர்பில் இங்கு உரையாற்றிய பலரும் சிலாகித்துப் பேசினர். அதனை உருவாக்குவதற்கான பின்னணி வலுவானது. ஒரு சமூகத்தின் அடையாளம் என்பது மிகவும் முக்கியமானது. குறிப்பாக எமது பிரதேசத்தின் அடிப்படை என்னவென்று தெரிந்து கொள்ள இந்த நூதன சாலை இன்று சான்றாக உள்ளது.

இன்றைய நவீன காலத்துக்கு ஏற்ப எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.அதாவது எமது சமூகத்துக்கு எதிராக வருகின்ற கருத்துக்களை முறியடிக்க நாம் கற்றவர்களாக இருக்க வேண்டும். இன்றைய துரதிஷ்டம், அதிகமானவர்கள் பணம் சம்பாதிப்பமை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளனர். அதுவும் இன்றியமையாததொன்று. அதைவிட முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியது கல்விக்கு என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் மட்டுல்ல இலங்கையிலும் ஏன் சவூதி அரேபியாவிலும் இன்று முன்னுரிமை பொருளாதரத்தை தேடுவது என்ற நிலையைக் காணலாம். இலங்கையின் பண்டைய ஆட்சிக் காலத்தில் அமைச்சரைவையில் முஸ்லிம்கள் இருந்துள்ளனர். அவர்கள் தமது உரிமைக்காகவும், மதச் சுதந்திரத்துக்காகவும் போராடினார்கள்.

தங்களது கலாசாரத்தை இழந்த அடிமைப்பட்ட அரசியலுக்கு எதிராகப் பேசினார்கள். எமது மத உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

எனவே நாம் நெறிப்படுத்தப்பட்ட கலாச்சார விழுமியங்களுடன் எமது நேர்மையான செயற்பாடுகளை ஏனைய சமூகங்களும் பெருமைப்படும் வகையில் விதைப்பது காலத்தின் தேவையாகும்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கைப் பலப்படுத்துவதன் மூலம் முஸ்லிம்களுக்கான அரசியல் கட்டமைப்பபை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.- என்றார்.

இந்த நிகழ்வில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் முகைத்தீன், பொதுச் செயலாளர் கே.ஏ.எம் அபூபக்கர் மற்றும், கமுதி பஷீர் பைத்துல்மால் அமைப்பின் நிர்வாகிகள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் முகைத்தீன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

கமுதி பஷீர் பைத்துல்மால் கல்வி அமைப்பால் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையும் வழங்கி வைக்கப்பட்டது.



# சாமிமலை நகரில் இருந்து கதிர்காம யாத்திரை ஆரம்பம்

(மஸ்கெலியா)

சாமி மலை நகரில் இருந்து நேற்று சிவனு சக்திவேல் தலைமையில் கதிர்காமம் பாதயாத்திரை ஆரம்பித்தது.

நேற்று மாலை 3 மணிக்கு 22 ஆண், பெண் இருபாலரும் கலந்து கொண்டு நடைப் பயணமாக கதிர்காமம் நோக்கி புறப்பட்டு சென்றனர்.

இவர்கள் அனைவரும் நோர்வூட் நகரில் உள்ள ஆலயத்தில் தங்கி இன்று காலை மீண்டும் தலவாக்கலை நோக்கிப் புறப்பட்டு சென்றனர்.

இவ்வாறு செல்லும் வழியில் பாத யாத்திரையில் யாத்திரிகர்கள் கலந்து கொள்ள முடியும் என அதன் தலைவர் சிவனு சக்திவேல் தெரிவித்தார்.

தொடர்ந்து லிந்துல, நானுஓயா, நுவரெலியா, பொரகஸ், வெளிமடை, ஹப்புதளை, பண்டாரவளை, கும்பல்வளை, வெள்ளவாய், நெத்திலிவலை, தனமன்வலை, மான் பௌத்த விகாரையில் 2 நாள் தங்கி 25 ஆம் திகதி கதிர்காமம் சென்றடைவர் 26 ஆம் திகதி இடம் பெற வுள்ள கொடி ஏற்றும் நிகழ்வில் கலந்து கொண்டு ஆலய தரிசனம் செய்யப் பத்தர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கொடூரச் சட்டம்

மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத - கொடூர - குரூர - காட்டுமிராண்டித்தனமான சட்டம் என்று வர்ணிக்கப்படும் இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மோசமான துஷ்பிரயோகம் குறித்து மீண்டும் ஒரு தடவை விவரம் வெளியாகி இருக்கின்றது.

அதிகாரத்துக்கு வரும்வரை கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மிக மோசமான காட்டுமிராண்டி சட்டம் என்று வர்ணித்து வந்த அநுரகுமார திஸநாயக்கா வினால் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரை தடுத்து வைக்க வழங்கப்பட்ட உத்தரவு அடிப்படை மனித உரிமைகளை மீறும் நடவடிக்கை என இலங்கை மனித உரிமைகள் ஆணையம் தீர்ப்பளித்துள்ளது

கொழும்பு சிட்டி சென்டர் மோலில் 'இஸ்ரேலின் இன வெறியை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்!' என ஸ்டிக்கர் ஒட்டிய ருஷ்டி என்பவரை பயங்கரவாத தடுப்பு பிரிவு கைது செய்து, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா விடுத்த தடுப்பு காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்தது.

இந்த விடயம் குறித்து விசாரணை செய்த இலங்கை மனித உரிமைகள் ஆணையம், இப்படி முகமது ருஸ்டியை கைது செய்து தடுத்து வைத்தமை அவரது அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கை எனத் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் கைது, அரசமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம், சமத்துவம் மற்றும் பாகுபாட்டுக்கு உள்ளாகாத உரிமை ஆகியவை உட்பட பல உரிமைகளை மீறுவதாக மனித உரிமைகள் ஆணைய விசாரணையில் கண்டறியப்பட்டிருக்கின்றது.

ருஷ்டியின் கைதுக்குப் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு கூறிய கருத்துக்கள், விளக்கங்கள், காரணங்கள் போன்றவை சின்னத்தனமானவை, பொருத்தமற்றவை, அற்பமானவை என்பது மனித உரிமைகள் ஆணையத்தின் விசாரணையில் அம்பலமாகி உள்ளது. இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள 30 பக்கத் தீர்ப்பு அறிக்கையில் இது பற்றிய விடயங்கள் விலாவாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இப்போது கைது செய்யப்படுவோர் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் ஒவ்வொருவர் விடயத்திலும் இவ்வாறு மனித உரிமை ஆணையம் தலையிட்டு, விசாரித்து, உண்மைகளை அம்பலப்படுத்தக்கூடிய நிலைமை உள்ளது.

ஆனால், இதற்கு முன்னர் யுத்த காலத்தில் இந்தச் சட்டத்தின் கீழ் பல்லாயிரம் தமிழர்கள் கண்மூடித்தனமாக கைது செய்யப்பட்டார்கள். சந்தேகத்தின் பேரில் சித்திரவதைகளை அனுபவித்தார்கள். பல ஆண்டுகள் தடுப்புக் காவலில் வெதும்பினார்கள். இவை பற்றி எல்லாம் அச்சமயத்தில் மனித உரிமைகள் ஆணையம் தனித்தனியாக விசாரணை நடத்தி உண்மைகளைக் கண்டறியும் சூழ்நிலை இருக்கவில்லை.

இப்போது சாதாரண காலத்தில் இந்த சட்டம் பிரயோகிக்கப்படுகின்ற மோசமான நிலைமையை ருஷ்டியின் தடுப்புக் காவல் உத்தரவு அம்பலப்படுத்தி நிற்கின்றது.

இப்போதே இந்த நிலைமை என்றால், யுத்த காலத்தில் இந்தச் சட்டம் எவ்வளவு மிக மோசமாக - கொடூரமாக - கீழ்த்தரமான முறையில் - பயன்படுத்தப்பட்டு இருக்கும் என்பதை ஊகிப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான விடயம் அல்ல.

இந்தக் கொடூர சட்டத்தை இல்லாத ஒழிப்போம் என்று சூளுரைத்து அதன் பேரில் அதிகாரத்துக்கு வந்தவர்கள் இன்னமும் அந்தச் சட்டத்தை தாங்களே பிரயோகித்து, மக்களின் மனித உரிமைகளை மோசமாக பறிப்பது இந்த நாட்டின் பெரும் துரதிஷ்டம்.



# ஆளுநரின் பங்கேற்புடன் இலவச மருத்துவ சேவை!

**(அபு அலா, த.ஜெபி ஜனார்த்)**

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இலவச மருத்துவ முகாம் திருகோணமலை கோமரங்கடவெல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மதவாச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று (14) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.ஏ.சீ.என்.தலங்கம, மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இந்த மாபெரும் இலவச வைத்திய முகாமில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள சுகாதாரத் திணைக்களம், சுதேச வைத்திய திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களம் ஆகியன பங்கேற்றிருந்தன.

பொது மக்களுக்குத் தேவையான வைத்திய சேவைகளை வழங்குவதற்காகப் பல்துறை சார்ந்த வைத்திய நிபுணர்கள் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த வைத்திய பரிசோதனையின்போது வைத்திய ஆலோசனையுடன் நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்பட்டன. கை கால் மூட்டு வலிகள், முறிவுகள் போன்றவற்றுக்கு ஆயுள்வேத மசாஜ் சிகிச்சையும் வழங்கப்பட்டது.

மேலும் நோயாளிகளுக்கு, ஆரோக்கிய மூலிகைக் கஞ்சி மற்றும் பிஸ்கட் ஆகியவையும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, பிரதம செயலாளர் டி.ஏ.சீ.என்.தலங்கம, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.யீ.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க, கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்கள ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பூர்ணிமா விமலரத்ன, சமூக சேவைகள் திணைக்கள மாகாண பணிப்பாளர் உதயகுமார் சிவராஜா, சிறுவர் நன்னடத்தை திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வானி உள்ளிட்ட பல உயரதிகாரிகள், சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள், மாகாண திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# புத்தளம் விருதோடை குளத்தை திருத்த பார்வையிட்ட பைசல் எம்.பி.

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் கொத்தான்தீவு குளம் மிக நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டது. இந்த விருதோடை குளத்தைப் புனரமைப்புச் செய்து அபிவிருத்தி செய்வற்காக புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே. எம். பைசல் பார்வையிட்டார்.

இதன்போது முந்தல் பதில் பிரதேச செயலாளர் மற்றும் முந்தல் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் ஊர் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விருதோடைக் குளத்தை முழுமையாகச் சுத்தம் செய்து நன்நீர் மீன் வளர்ப்பு என்பவற்றோடு குளத்து நீரைப் பயன்படுத்தி விவசாயத்தை விரிவுபடுத்துதல் அத்தோடு குளப்பாதையை அகழப்படுத்தி செப்பனிடல் மேலும் குளத்தை சூழ வடிகான் அமைத்து மழை காலங்களில் வெள்ள நீரை வழிந்து ஓட வைத்தல் மற்றும் குளத்தைச் சுற்றி நடைபாதை அமைத்தல் போன்ற வேலை திட்டங்கள் குளத்தை மையமாக வைத்து ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலையும் புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம் பைசல் அதிகாரிகளுடன் மேற்க்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# தலைமைத்துவங்களும், மக்களும் கொண்டிருக்கும் நம்பிக்கையை பாதுகாக்க முடியும்வரை உழைப்பேன்

## காத்தான்குடி நகர பிதா எஸ்.எச்.எம்.அஸ்பர்

(நூருல் ஹுதா உமர்)

கல்விமான்கள் பலரும் பல கட்சிகளை உருவாக்கி பல்வேறு அரசியல் எத்தனங்களை செய்த போதும் அவர்களுக்கு ஆணை வழங்காமல் காத்தான்குடி மக்கள் எங்களுக்கே அவர்களின் ஆணையை வழங்கினார்கள். காத்தான்குடி நகர சபையில் உறுப்பினராக, உதவி நகர பிதாவாக, நகர பிதாவாக இரு தசாப்தங்களாக பணியாற்றும் வாய்ப்பைக் காத்தான்குடி மக்களும், ஊர்த் தலைமைத்துவங்களும் எனக்கு வழங்கினார்கள்.

அவர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க முடியுமானவரை ஊருக்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு காத்தான்குடி நகர பிதா எஸ்.எச்.எம்.அஸ்பர் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர சபையின் நகர பிதாவாக தொடர்ச்சியாக மூன்று முறை தெரிவு செய்யப்பட்டுள்ள எஸ்.எச்.எம். அஸ்பருக்கு, சிலோன் மீடியா போரம் உறுப்பினர்கள் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையை மீண்டும் பொறுப்பேற்ற பின்னர் காத்தான்குடி நகருக்கு தேவையான அபிவிருத்தி வேலைகள், காத்தான்குடி நகரத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை அரசின் உயர் மட்டங்களில் செய்து வருகிறேன். காத்தான்குடி தலைமைத்துவங்களும், அதிகாரிகளும் வழங்கும் ஒத்துழைப்பே காத்தான்குடியை நிர்வகிக்க உதவியாக இருக்கிறது. எங்களின் பணிகளுக்கு ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் வழங்கும் பணி சிறப்பாகவே இருக்கிறது. நான் தவிசாளராகப் பதவியேற்று என்னைக் கௌரவித்த முதல் நிகழ்வாக இது அமைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் போரத்தின் செயலாளர் ஏ.எஸ்.எம்.முஜாஹித், பொருளாளர் நூருல் ஹுதா உமர், பிரதிச் செயலாளர் எம்.எம்.ஜபீர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# திருகோணமலை குச்சவெளியில் வேலைவாய்ப்பு ஆதரவு அலகு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களம், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் ஜெய்க்காவுடன் இணைந்து, மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு ஆதரவு பிரிவு ஒன்றைக் குச்சவெளி பிரதேச செயலாளர் சியாவுல் ஹக் தலைமையில் குச்சவெளி பிரதேச செயலகத்தில் அதிகார பூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது.

எதிர்காலத்தில், இந்த பிரிவு ஒவ்வொரு மாற்றுத் திறனாளிக்கும் அவர்களின் கல்வி மற்றும் தொழில் திறன்களைக் கருத்தில் கொண்டு பொருத்தமான வேலை வாய்ப்புகளை வழங்க உதவியாக இருக்கும்.

இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளர் தவராசா பிரணவன் சமூக சேவைகள் மேம்பாட்டு அலுவலர் எம்.குகதாசன் மற்றும் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.






# நாங்கள் வெளிநாட்டு உதவிகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

வெளிநாட்டு உதவிகளில் நாம் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது. வெளிநாட்டிலுள்ள அடுத்த தலைமுறைகள் – சந்ததிகள் மாறும்போது இந்த உதவிகள் எதிர்காலத்தில் நின்றுபோகக் கூடும். எனவே நாம் எமது சொந்தக் காலில் நிற்கவேண்டும். அது இந்தச் சிறுவர் இல்லத்துக்கு மாத்திரமல்ல எமது சமூகத்துக்கும் பொருந்தும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி 4 ஆவது ஆண்டாகவும் இல்ல மைதானத்தில் நேற்று சனிக்கிழமை (14) கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பதில் பணிப்பாளரும், சமுர்த்திப் பணிப்பாளரும் இல்லத் தலைவருமான ச.மோகனபவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலராகவும், மாவட்டச் செயலராகவும் இருந்த காலத்தில் இந்த இல்லத்துக்கு வந்திருக்கின்றேன். இன்று 16 ஆண்டுகளின் பின்னர் வருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இன்றைய எமது சமூகச்சூழல் மாற்றமடைந்து செல்கின்றது. பல குடும்பப் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே அந்தப் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான சிறுவர் இல்லங்கள் அவசியமாகின்றன. பிள்ளைகளுக்கு வீடுகளே சிறந்த பாதுகாப்பு என்றபோதும், அந்த வாய்ப்புக் கிடைக்காத பிள்ளைகளுக்கு இவ்வா றான இல்லங்களே அரணாக அமைகின்றன.

இன்று மாணவர்கள் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றமையால் பல பாடசாலைகள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கு 200 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றார்கள். இதுவும் ஒரு பாடசாலைதான். சிறுவர் இல்லம் ஒன்றுநடத்தும்விளையாட்டுப்போட்டியை இப்போதுதான் நான் முதன்முதலில் காண்கின்றேன். இது மிகச் சிறந்த முன்னுதாரணம்.

சிறுவர்களுக்கு பொழுதுபோக்குக்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் திசைமாறாமல் இருப்பதற்கு விளையாட்டு அல்லது கலை ஊடாக அதை வழங்கவேண்டும். இந்தச் சிறுவர் இல்லம் விளையாட்டுப் போட்டியையே நடத்தியிருக்கின்றது. இந்த விளையாட்டுப் போட்டியைப் பார்க்கும்போது, நீங்கள் ஒவ்வொருவரும் எப்படி உற்சாகமாக பங்குபற்றினீர்கள் என்பதைக் கண்டுகொண்டேன். இந்தச் செயற்பாட்டை ஏனைய இடங்களிலும் முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர், சிறுவர் இல்லச் சிறுவர்களுக்கு தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை வழங்கி என்.வி.கியூ. சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கவிருக்கின்றார். இதன்மூலம் சிறுவர் இல்லத்திலிருந்து சிறுவர்கள் சமூகத்துக்குச் செல்லும் போது அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்க முடியும்.–என்றார்.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், ஆசிரிய கல்வியலாளர் தி.சிவரூபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.













# கிழக்கு புதிய கடற்படைத் தளபதி ஆளுநருடன் சுமூகமான சந்திப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

கடற்படையின் 28 ஆவது கிழக்கு மாகாண கடற்படைத் தளபதியாக கடமைகளைப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் ரவீந்திர திசேரா, திருகோண மலையில் உள்ள ஆளுநர் அலுவல கத்தில் மரியாதை நிமித்தமாக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவைச் சந்தித்து, சுமூகமான கலந்துரையாடலை நடத்தினார்.










# மகிழடித்தீவு வைத்தியசாலையின் ஏற்பாட்டில் விழிப்பூட்டல் பேரணி!

(எஸ்.சதீஸ்)

சர்வதேச புகைத்தல் போதைப் பொருள் பாவனை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் விழிப்பூட்டல் நிகழ்வு இடம்பெற்றது.

புகைத்தல் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் தாக்கம் பற்றிய விழிப்பூட்டல் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்திச் சென்றனர்.

மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான, புகைத்தல் எதிர்ப்பு விழிப்பூட்டல் பேரணி மகிழடித்தீவு சந்தியூடாக கொக்கட்டிச்சோலை பிரதான விதியால், பட்டிப்பளை சந்தி வரை சென்று அங்கு புகைத்தல் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் கி. டுலக்சினி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கி. ரமேஸ் மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்தி நலன் விரும்பிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வான்கதவும் இரண்டு அடி அகலத்துக்குத் திறக்கப்பட்டுள்ளன என்று அணையின் பொறுப்பு பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, பொல்கொல்ல அணையிலிருந்து விக்டோரியா நீர்த்தேக்கம் வரையிலான மகாவலி ஆற்றின் தாழ்நிலப் பிரதேசங்களில் வசிப்போர் எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுள்ளது.





# முல்லை. மரபைப் பறைசாற்றும் வகையில் வட்டுவாகல் பாலத்துக்கான எண்ணக்கரு!

சூழலுக்கு இயைவான சூழல்சார் சுற்றுலாவை மேன்மைப்படுத்தும் வகையிலும் முல்லைத்தீவின் மரபைப் பறைசாற்றும் வகையிலும் முன்மொழியப்படும் வட்டுவாகல் பாலத்துக்கான எண்ணக்கரு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பரந்தன் – முல்லைத்தீவு பிரதான வீதியில் முல்லைத்தீவு நகரப் பகுதியையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் பிரதான பாலமாக விளங்கும் வட்டுவாகல் பாலம் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது.

பல்வேறு தடவைகள் இதனை புணரமைப்புச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் 2020 ஆம் ஆண்டு அப்போதய ஆளுநர் திருமதி சாள்ஸ் இணைத் தலைமையில் அரச அதிபர் க. விமலநாதன் மற்றும் மேலதிக அரச அதிபர் க. கனகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கு அமைவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வட இலங்கை ஈரநில பாதுகாப்புக் கழகத்தின் நிறுவுனர் சூழலியல் மற்றும் பறவை ஆய்வாளர் பா. ராஜ்குமாரால் 5 வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பறவை மற்றும் சூழல்சார் சுற்றுலா வாய்ப்புக்கள் தொடர்பான ஆய்வின் அடிப்படையில் தன்னார்வ நோக்கில் அரச அதிபருக்கு இந்தச் செயற்றிட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்பின்னர் இலங்கை கொவிட் – 19 மற்றும் தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடி காரணமாக இதற்கான நிதி உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்தப் பாலத்தைப் பயன்படுத்தும் பல்வேறு தரப்பினர்களது தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைவாக தற்போதய அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் மேலதிக அரச அதிபர் சி.குணபாலன் ஆகியோரது முயற்சியால் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களது முயற்சியாலும் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனது முயற்சியாலும் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் ஆகியோரது முயற்சியாலும் ஆளுநர் ந.வேதநாயகனின் முயற்சியாலும் ஜனாதிபதி மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுக மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் முயற்சியாலும் வட்டுவாகல் பாலக் கட்டுமாணத்துக்கான நிதி இவ்வாண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

வட்டுவாகல் பாலம் நந்திக்கடல் கடல் நீரேரியும் முல்லைத்தீவுக் கடலும் சங்கமிக்கும் இயற்கை எழில்மிகு பகுதியில் அமையப் பெற்றுள்ளது.

கடல் நீரேரியும் அதனுடன் இணைந்த கண்டல்

தொடர்ச்சி▼





# முல்லை. மரபைப் பறைசாற்றும் வகையில் வட்டுவாகல் பாலத்துக்கான எண்ணக்கரு!

தொடர்ச்சி▲

தாவரங்களும் குடிபெயர் மற்றும் உள்ளூர் வதிவிடப் பறவைகளின் பிரதான வாழ்விடமாக அமைகின்றது. காலணித்துவ ஆட்சியில் குறிப்பாக பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே இந்தப் பகுதியில் பறவை பார்த்தல் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அது மட்டுமன்றி இந்தப் பகுதி பாரமரியமாக சூழ் லாம்பு மற்றும் கரப்பு போன்ற பாரம்பரிய மீன்பிடி முறைகளைப் பின்பற்றி மீன்கள் பிடிக்கப்படும் இடமாகவும் சப்தகன்னியர் வழிபாட்டு மரபை தொடர்ந்து நிலைநாட்டும் பகுதியாகவும் விளங்குகின்றது.

எனவே சூழலிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதியில் 100 வருட ஆயுள்கொண்டதாக கட்டப்படும் பாலங்கள் உண்மையில் உலகளாவிய ரீதியில் சுற்றுலா மையங்களாக கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் பறவை பார்த்தல், இயற்கையை ரசித்தல், புகைப்படம் எடுத்தல், இயற்கை நடை என பல்வேறு இயற்கை சூழல்சார் சுற்றுலாச் செயற்பாடுகளை மேன்மைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபையினுடாகப் பாலத்தின் இரு பகுதிகளையும் மையப்படுத்தி சுற்றுலாச் செயற்பாடுகளை மேன்மைப்படுத்திச் சிறு வியாபார முயற்சியாண்மையையும் விருத்தி செய்யக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் கடின வலிகளைச் சுமந்த முல்லைத்தீவு மக்களுக்கு ஆத்மார்த்த ரீதியில் வலி நிவாரணியாக இயற்கையுடன் இணைந்த பௌதீக கட்டுமாணம் என்ற வகையில் அசைவு, சூழல்சார் சுற்றுலா, வாழ்வாதார அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் கலாசார அடையாளம் ஆகிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி இந்தப் பாலத்துக்கான முப்பரிமாண மாதிரி வடிவமைப்பு மற்றும் இது தொடர்பிலான வீடியோ என்பன என்னால் வடிவமைக்கப்பட்டு தொழிநுட்ப உத்தியோகத்தர் ரோசிதனின் தொழிநுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்டு எல்லோருடைய பார்வைக்காகவும் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை வரலாற்றில் சூழலியல் மற்றும் சுற்றுலா நோக்கில் கலையுணர்வுடன் வடிவமைக்கப்பட்ட முதலாவது பாலமாக அமையவேண்டும் என எதிர்பார்பார்க்கப்படுகிறது.

நான்குவருடமாக இதனைநடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன்.

அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினாகள் மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுக மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைப்பீடம், ஜனாதிபதி ஆகியோர் நிதிக்கிடைப்பனவை மட்டும் வைத்து இந்தச் செயற்றிட்டத்தை வரையறுக்கக் கூடாது.

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்காக சூழல்சார் சுற்றுலாவை மேம்படுத்தும் முகமாக இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த அனைவரது ஒத்துழைப்பையும் எதிபார்க்கின்றேன்.

**பா.ராஜ்குமார், நிறுவுனர்,**
**பறவையியல் மற்றும் சூழலியல் ஆய்வாளர்,**
**வட இலங்கை ஈரநில பாதுகாப்புக் கழகம்,**
**யாழ்ப்பாணம்.**





# சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்கு இளைஞர் சேவைமன்ற பாதயாத்திரை!

## இன்று காலை ஆரம்பமானது

தேசிய இளைஞர்கள் சேவை மன்றம் நிலையான சமாதானத்துக்காக மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இளைஞர்களின் சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை இன்று (15) ஞாயிற்றுக்கிழமை 9 மணியளவில் தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

சந்நிதியான் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான பாதயாத்திரை சந்நிதியான் ஆச்சிரமத்துக்குச் சென்றது. அங்கு விசேட வழிபாடுகள், சந்நிதியான் ஆச்சிரம உபசரணைகள், உதவிகளுடன் கருத்துரைகள் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது. குறித்த பாதயாத்திரையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து இளைஞர்கள் இணைந்துள்ளனர்.

இதேவேளை குறித்த பாத யாத்திரையில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஐந்து இளைஞர்கள் இணைந்து செல்லவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர்கள் சேவைகள் மன்ற பணிப்பாளர் வினோதினி சிறிமோகன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வுகளில் வடக்கு மாகாண இளைஞர்கள் சேவை மன்ற பணிப்பாளர் ஜெமினி சந்திரசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு யாத்திரிகர்களை வழியனுப்பிவைத்தார்.







# கடந்த வருடம் நடந்த போதைப் பொருள் கடத்தல்; ஒரு வருடத்தின் பின் கடற்படை அதிகாரி கைது!

போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டில் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில், திருகோணமலையில் உள்ள இலங்கை கடற்படை கப்பல் துறையில் பணியாற்றும் லெப்டினன்ட் கொமாண்டர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜுன் 26 ஆம் திகதி அன்று, இலங்கை கடற்படை 48 கிலோ கிராம் 880 கிராம் ஹெராயின் மற்றும் 142 கிலோகிராம் 184 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒரு கப்பலில் இருந்து ஆறு உள்ளூர் கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கடற்படை புலனாய்வு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நுகேகொடை பகுதியைச்சேர்ந்த 41 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.



# இந்திய நிதியுதவியுடன் கிழக்கில் செயற்படுத்தப்படவுள்ள திட்ட ஆய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

இந்திய நிதியுதவியுடன் கிழக்கு மாகாணத்தில் 2.3 பில்லியன் ரூபா செலவில் செயற்படுத்தப்படவுள்ள 33 முன்மொழியப்பட்ட திட்டங்களை மீள் ஆய்வு செய்வதற்கான விசேட கூட்டம் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நேற்று (14) நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் அமைச்சுகள் மற்றும் திணைக்கள தலைவர்கள் மற்றும் துறை சார் நிறுவனங்களின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.



# "கழுகுமலை பத்து" நூல் வெளியீடு!





(வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான யாழ். – கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் 45 நாள்களில் நேற்று பொத்துவிலைச் சென்றடைந்தனர்.

முன்னதாக யாழ்.– கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் சங்குமண்கண்டி காட்டுப் பிள்ளையார் கோவிலை தரிசித்தனர்.

அங்கு அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர்களில் அமைப்பான "அகத்தியம்" என்கின்ற அமைப்பினுடைய காலை, மதியம் உணவுகள் வழங்கபபட்டன. காட்டுப்பாதையில் முருகப்பெருமானின் "கழுகுமலை பத்து" எனும் பதிகத்தைப் புத்தக வடிவில் வெளியிட்டுப் பாதயாத்திரீகர்களுக்கு வழங்கினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கவி. கோடீஸ்வரன், அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் கண. இராசரத்தினம், அகத்தியம் அமைப்பினுடைய தாதிய உத்தியோகத்தர்கள் குழுவினரும் கலந்து கொண்டனர்.

பாதயாத்திரை பற்றிய பாடல்களை அந்த இடத்தில் பஜனையாக பாடி பக்திபூர்வமான ஒரு வழிபாட்டுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.



# ஈரானில் அணுமையம் தகர்ப்பு இராணுவ தலைமை அழிப்பு!

## மத்திய கிழக்கில் கர்ஜிக்கும் சிங்கமாக இஸ்ரேல் !!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி, ஈரானின் முக்கிய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர். எவராலும் அடக்க முடியாத மத்திய கிழக்கின் கர்ஜிக்கும் சிங்கமாக இஸ்ரேல் எழுந்து நிற்கிறது.)

ஈரானியப் பகுதிக்குள் இஸ்ரேல் ஆழமான தாக்குதல்களை நடத்தியுள்ளது. மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான பதற்றத்தை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் பல உயர் மட்ட ஈரானிய இராணுவ மற்றும் அணுசக்தி அதிகாரிகள் உயிரிழந்தனர். காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. இஸ்ரேலின் வலிந்த தாக்குதல், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மோதலில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது.

மேற்கத்தய ஊடகத் தகவல்படி, தெஹ்ரானைச் சுற்றியுள்ள குறைந்தது ஆறு இராணுவத் தளங்களை இஸ்ரேல் குறிவைத்துத் தாக்கியுள்ளது. இதில், ஈரானின் அணுசக்தி திட்டத்தில் பங்கு வகிப்பதாக நீண்டகாலமாக சந்தேகிக்கப்படும் முக்கிய பார்ச்சின் தளமும் அடங்கும். இராணுவத் தளங்கள் மட்டுமல்லாமல், இராணுவத் தளபதிகள் தங்கியிருந்த பலத்த பாதுகாப்புடன் கூடிய இரு குடியிருப்புகள் மற்றும் பல அடுக்குமாடிக் கட்டடங்களும் இலக்கு வைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இவை திட்டமிட்ட படுகொலை முயற்சிகளாகவே தென்படுகின்றன.

### இராணுவ தலைமை அழிப்பு

இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் (ஐசுபுஊ) தளபதி மேஜர் ஜெனரல் ஹொசைன் சலாமி உயிரிழந்ததை, ஈரானிய அரசுத் தொலைக்காட்சி, உறுதிப்படுத்தியுள்ளது. இது ஈரானின் இராணுவத் தலைமைக்கு ஒரு பெரும் பின்னடைவாகும். ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று மூத்த அணு விஞ்ஞானிகளான ஃபெரெய்டூன் அப்பாஸி மற்றும் மொஹமத் மெஹ்தி தெஹ்ரான்ச்சி ஆகியோரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஈரானின் அணுசக்தி லட்சியங்களின் மையப்பகுதியிலேயே நேரடியாகத் தாக்குதல் நடத்தப்பட்டதைக் காட்டுகிறது.



இந்தத் தாக்குதல்களுக்கு மேலாக, இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட், ஈரானிய எல்லைக்குள் தொடர்ச்சியான இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக ஒரு இஸ்ரேலிய ஆதாரம் வெளிப்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கைகள் ஈரானின் மூலோபாய ஏவுகணை அமைப்புகள் மற்றும் வான் பாதுகாப்புத் திறன்களைக் குறிவைத்து, ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜூன் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலையில், தெஹ்ரான் அணு ஆயுதங்களை உருவாக்குவதைத் தடுக்க ஈரானிய அணுசக்தி இலக்குகளைத் தாக்கியதாக இஸ்ரேல் கூறியது. மேலும் நாட்டின் முக்கிய யுரேனியம் செறிவூட்டல் நிலையம் உட்பட வெடிப்புகள் ஏற்பட்டதாக ஈரானிய ஊடகங்களும் தெரிவித்தன.

### அணுசக்தி மையங்கள் இலக்கு

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஏவுகணை மற்றும் அணுசக்தி நிலையங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதலை இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் ஈரானின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு இலக்குகளை உள்ளடக்கிய முன்கூட்டியே தாக்கும், துல்லியமான, ஒருங்கிணைந்த தாக்குதல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய அரசு அவசரநிலை பிரகடனம் செய்துள்

தொடர்ச்சி▼

# ஈரானில் அணுமையம் தகர்ப்பு இராணுவ தலைமை அழிப்பு!



தொடர்ச்சி▲

ளதுடன், ஈரானுக்கு எதிராக பல சுற்றுத் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இதேவேளை, குறித்த தாக்குதலையடுத்து, அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பாடசாலைகள் மற்றும் பணியிடங்கள் மூடப்பட வேண்டும் என்றும் கூட்டங்கள் நடத்தப்படக் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆபரேஷன் ரைசிங் லயன்

ஈரானின் அணுசக்தித் திட்டத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல்களை “ஆபரேஷன் ரைசிங் லயன்” (Operation Rising Lion) திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். ஈரான் இஸ்ரேலின் உயிர்வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இஸ்ரேல் நாடு பழிவாங்கலை எதிர்பார்க்கிறது என்று கூறியுள்ளார். இந்த தாக்குதல் எவ்வளவு சீக்கிரம் நடந்தது என்பதைக் கண்டு வெள்ளை மாளிகை ஆச்சரியப்பட்டிருக்கலாம். ஈரானை தாக்க இஸ்ரேல் முழுமையாக தயாராக இருப்பதாகக் கூறப்பட்ட பின்னர், அமெரிக்கா தனது சில ஊழியர்களை பாக்தாத்திலிருந்து வெளியேற்றியது.

### இஸ்ரேல் தீர்க்கமான தருணத்தில்!

இஸ்ரேலின் வரலாற்றில் ஒரு தீர்க்கமான தருணத்தில் இருக்கிறோம், என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். அணு குண்டு, அதன் பாலிஸ்டிக் ஏவுகணை திட்டம் மற்றும் அதன் நடான்ஸ் யுரேனியம் செறிவூட்டல் வசதி ஆகியவற்றில் பணிபுரியும் ஈரானிய விஞ்ஞானிகளை இஸ்ரேல் குறிவைத்தது. இந்த நடவடிக்கை பல நாட்கள் தொடரும் என்றும் அவர் கூறினார்.

தெஹ்ரானில் பல வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்பு முழு எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் ஈரானின் அரசு தெரிவித்துள்ளது. இஸ்ரேல் பல டசின் கணக்கான அணு மற்றும் இராணுவ இலக்குகளைத் தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில நாள்களுக்குள் 15 அணு குண்டுகளைத் தயாரிக்க போதுமான பொருள்கள் ஈரானிடம் இருப்பதாக அந்த அதிகாரி கூறினார். ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் அரசு நடத்திய முன்னெச்சரிக்கை தாக்குதலைத் தொடர்ந்து, உடனடி காலக்கெடுவில் இஸ்ரேல் அரசு மற்றும் அதன் பொதுமக்கள் மீது ஏவுகணை மற்றும் UAV (ட்ரோன்) தாக்குதல் எதிர்பார்க்கப்படுகிறது என்று பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்தார்.

### அமெரிக்க தாக்குதலில் ஈடுபடவில்லை

தற்காப்புக்காக இந்த நடவடிக்கை அவசியம் என்று இஸ்ரேல் நம்புவதால், ஒருதலைப்பட்சமாக இஸ்ரேல் செயல்பட்டதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ கூறியுள்ளார்.

இஸ்ரேல் ஈரானுக்கு எதிராக ஒருதலைப்பட்ச நடவடிக்கை எடுத்ததுள்ளது. ஈரானுக்கு எதிரான தாக்குதல்களில் நாங்கள் ஈடுபடவில்லை. மேலும் பிராந்தியத்தில் அமெரிக்கப் படைகளைப் பாதுகாப்பதே எங்கள் முதன்மையான முன்னுரிமை என்று ரூபியோ ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

### கச்சா எண்ணெய் விலை உயர்வு

இஸ்ரேலிய தாக்குதல் செய்தி வெளியானதும் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு மூன்று டாலருக்கும் அதிகமாக உயர்ந்தது.

ஈரான் மீதான இஸ்ரேலிய தாக்குதலின் பிறகு உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளன. இதனால் பல பங்குகள் சரிந்தும் வருகின்றன.

இச் செய்தி வெளியான பிறகு கச்சா எண்ணெய் மற்றும் NYMEX லைட் ஸ்வீட் 8 வீதத்துக்கும் அதிகமாக உயர்ந்தன.

எரிசக்தி வளம் மிக்க பிராந்தியத்தில் மோதல்கள் விநியோகத்தை சீர்குலைத்து, குறைந்த எண்ணெய் கிடைக்கும் என்று சர்வதேச வர்த்தகர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இதற்கிடையில், முதலீட்டாளர்கள் தங்கம் மற்றும் சுவிஸ் பிராங்க் போன்ற பாதுகாப்பான புகலிட சொத்துக்கள் என்று அழைக்கப்படுபவற்றுக்கு மாறியதால், வெள்ளிக்கிழமை ஆரம்ப ஆசிய வர்த்தகத்தில் பங்குகள் சரிந்துள்ளன.

### அமெரிக்கவை மீறும் டெல்அவிவ்

ஏற்கனவே கடந்த புதன்கிழமை அமெரிக்க அதிகாரிகளுக்கு இஸ்ரேல் ஈரானுக்குள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது, இந்த விஷயத்தை நன்கு அறிந்த அதிகாரிகள், வளைகுடாவில் உள்ள அமெரிக்கர்களை இந்தப் பகுதியை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தியது.

மேலும் ஈராக்கில் உள்ள சில அமெரிக்க தளங்களில் ஈரான் பதிலடி கொடுக்கக்கூடும் என்று அமெரிக்கா எதிர்பார்த்ததாகவும் இந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஓமானில் தெஹ்ரானின் அதிகரித்து வரும் யுரேனியம் செறிவூட்டல் திட்டம் குறித்து அமெரிக்க மற்றும் ஈரானிய அதிகாரிகள் ஆறாவது சுற்று பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டிருந்தனர். ஆனால் இந்த தாக்குதலின் பின்னர், பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்துள்ளன.

ஈரான் மீதான இஸ்ரேலிய தாக்குதல் நடக்கக்கூடும் என்று டிரம்ப் எச்சரிக்கையாக கூறியிருந்தார். ஆனால் அமைதியான தீர்வுக்கான தனது நம்பிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்களுக்கு எதிரான தாக்குதலுக்கு இஸ்ரேல் தயாராகி வருவதாக அமெரிக்க உளவுத்துறை முன்னரே சுட்டிக்காட்டியது. மேலும் எதிர் வரும் நாட்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் பெயர் குறிப்பிட விரும்பாத நிலையில் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் சொல்லையும் மீறி, ஏன் அமெரிக்கவுக்கு சவாலாகவே தற்போது ஈரானை தாக்கியுள்ளது. ஆயினும் ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி, ஈரானின் முக்கிய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர். எவராலும் அடக்க முடியாத மத்திய கிழக்கின் கர்ஜிக்கும் சிங்கமாக இஸ்ரேல் எழுந்து நிற்கிறது.

# அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழப்பு 274 ஆக அதிகரிப்பு

## மத்திய அரசு, பொலிஸ், டாடா நிறுவன குழுக்கள் தீவிர விசாரணை



அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 274 ஆக உயர்ந்துள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கடந்த வியாழக்கிழமை லண்டனுக்கு புறப்பட்ட போயிங் விமானம் சில நிமிடங்களில் அங்குள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் விழுந்து வெடித்து விபத்துக்குள்ளானது.

இந்த பயங்கர விபத்தில் விஸ்வாஸ் குமார் ரமேஷ் என்ற பயணி தவிர விமானத்தில் இருந்து 241 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் விமானம் வெடித்து சிதறியதால் பிஜே அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மிகப்பெரிய அளவில் சேதம் ஏற்பட்டது.

பிஜே மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மருத்துவப் படிப்பு மாணவர்கள் உட்பட ஏராளமானவர்கள் இந்த கோர விபத்தில் சிக்கிக் கொண்டனர். அவர்களில் 33 பேர் உயிரிழந்தனர் என தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 274 ஆக உயர்ந்துள்ளது.

இறந்த 33 பேரில் பெரும்பாலானவர்கள் பிஜே மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவப் படிப்பு மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் என்று தெரியவந்துள்ளது.

இதற்கிடையே அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஊழியர்களில் சிலரை கடந்த 2 நாள்களாக காணவில்லை. அவர்கள் குறித்த தகவல்களையும் பொலிஸார் சேகரித்து வருகின்றனர். அவர்களும் விமான விபத்தில் உயிரிழந்து இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனால் விமான விபத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், விமான விபத்துக்கான காரணத்தை கண்டறிய தீவிர விசாரணை நடந்து வருகிறது. விபத்து நடந்த பகுதியில் ஏற்கனவே விமான போக்குவரத்து விசாரணைக் குழுவினர் தங்களது ஆய்வை தொடங்கி உள்ளனர். குஜராத் மாநில பொலிஸாரும் தனியாக விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

அதேபோல விமானத்துக்குச் சொந்தமான டாடா குழுமமும் தனிக் குழுவை அமைத்து விசாரணையை நடத்தி வருகிறது.

அதுமட்டுமல்லாமல் மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் உயர்நிலை விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அந்தக் குழுவினரும் தீவிர விசாரணையை தொடங்கி உள்ளனர். இந்த உயர்நிலைக்குழு அகமதாபாத்தில் விமான விபத்து நடந்த இடத்தில் தீவிர ஆய்வை மேற்கொள்ளும். அதோடு விபத்துக்கான உண்மையான காரணத்தை கண்டறிந்து அறிக்கையாக தயார் செய்து அதை மத்திய அரசிடம் வழங்கும். இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் இத்தகைய விபத்துக்களை தடுக்க உயர்மட்ட குழு விசாரணை பரிந்துரை உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

# அகமதாபாத் விபத்து, இஸ்ரேல் – ஈரான் போரால் இந்திய விமான போக்குவரத்து துறைக்கு சிக்கல்



அகமதாபாத் விமான விபத்து, இஸ்ரேல் – ஈரான் போர் ஆகியவற்றால் இந்திய விமானப் போக்குவரத்துத் துறைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், விமானப் பயணக் கட்டணங்கள் உயரும் ஆபத்து உருவாகியுள்ளது.

இஸ்ரேல் – ஈரான் இடையிலான போரால் அவற்றின் வான்வெளி மூடப்பட்டுள்ளது. இதனால் விமானங்கள் சுற்றிச் செல்ல வேண்டியிருப்பதால் ஏர் இந்தியா உட்பட உலகின் பல விமான நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் லண்டன், டுபாய், அபுதாபி, ரியாத், பிராங்பர்ட் போன்ற விமான நிலையங்களில் ஆயிரக்கணக்கான பயணிகள் சிக்கித் தவிக்கின்றனர் என கூறப்படுகிறது.

இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் துறையாகும். ஆண்டுதோறும் 15 சதவீத வளர்ச்சியுடன் இது செயல்படுகிறது. உலகில் மூன்றாவது இடத்தில் உள்ளது. ஆனால் சமீபத்திய சில சம்பவங்கள் அதன் முன்னேற்றத்தை பின்னோக்கி இழுப்பதாக உள்ளது.

முதலாவதாக, ஒபரேஷன் சிந்தூருக்குப் பிறகு, பாகிஸ்தான் தனது வான்வெளியை மூடியது, இதனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா செல்லும் இந்திய விமானங்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இது அவற்றின் பயண செலவை அதிகரித்துள்ளது.

தற்போது இஸ்ரேல் – ஈரான் இடையிலான போராலும் இந்தியாவிருந்து ஐரோப்பா மற்றும் அமெரிக்கா செல்லும் விமானங்களின் பயண தூரம் நீளும். உதரணமாக மும்பை, அகமதாபாத் மற்றும் டில்லியில் இருந்து புறப்படும் விமானங்கள் வட ஆப்பிரிக்கா வழியாக ஐரோப்பா செல்ல வேண்டியிருக்கும். இது, பயணக் கட்டணங்கள் 10 – 20 சதவீதம் அதிகரிக்க வழிவகுக்கும் என்பது விமானப் போக்குவரத்து நிபுணர்களின் கருத்தாகும்.

மேலும், ஒரு பெரிய விமான விபத்து ஏற்படும்போது, காப்பீட்டு நிறுவனங்களின் இழப்பீடு செலவு அதிகரிக்கும். இதனால் அகமதாபாத் விபத்து, அடுத்த ஆண்டு முதல் காப்பீட்டு பிரீமியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதில் வெவ்வேறு விமானங்களுக்கான காப்பீட்டு பிரீமியம் 5 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என காப்பீட்டுத் துறை நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். இதன் காரணமாகவும் விமானங்களின் பயணக் கட்டணம் உயரும் சூழல் தெரிகிறது.

# இஸ்ரேல் நகரங்கள் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் டெல் அவிவ் இராணுவத் தலைமையகம் தகர்ப்பு



இஸ்ரேல் ஒரே நாளில் 2 முறை தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக, அந்நாட்டின் தலைநகர் ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் உட்படபல நகரங்கள் மீது ஈரான் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில், இஸ்ரேல் இராணுவ தலைமையகம் உட்பட பல கட்டடங்கள் தகர்க்கப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை இஸ்ரேல் மீண்டும் ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதில் 150 இடங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, இஸ்ரேல் மீது ஈரான் நேற்று முன்தினம் இரவு ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலின் ராணுவ மையங்கள், விமானப்படை தளங்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து, டெல் அவிவ், ஜெருசலேம் உள்ளிட்ட பல நகரங்களிலும் சைரன் மூலம்மக்களுக்கு தொடர்ந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பீதியடைந்த மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தனர்.

எதிரி நாடுகளின் வான் தாக்குதலை சமாளிக்க அயர்ன் டோம் என்ற வான் பாதுகாப்பு ஏவுகணைகளை இஸ்ரேல் பயன்படுத்தி வந்தது. இந்த ஏவுகணைகள் நேற்று முன்தினம் இரவு முதல் வானில் பாய்ந்தன. ஆனால், நேற்று ஈரான் நடத்திய தாக்குதலை, இஸ்ரேலின் அயர்ன் டோம் ஏவுகணைகளால் முற்றிலும் தடுக்க முடியவில்லை. இதனால், டெல் அவிவ் நகரில் உள்ள இராணுவ தலைமையகம் மீது குண்டுகள் விழுந்து வெடித்தன.

ஜெருசலேம் நகர், ரிசான் லெசியான் ஆகிய பகுதிகள் மீது நேற்று அதிகாலை ஏவுகணைகள் வீசப்பட்டதில் ஏராளமான குடியிருப்புகள் சேதமடைந்தன. இந்த தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் அனைத்து பகுதிகளும் தாக்குதலுக்கு உள்ளானதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரான் தலைவர் அயதுல்லா அலி கொமேனி கூறும்போது,

“இஸ்ரேலுடன் போரிட ஈரான் இராணுவ படைகள் தயார் நிலையில் உள்ளன. மக்கள் அனைவரும் ராணுவத்துக்கு ஆதரவாக உள்ளனர்.” என்றார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியபோது,

“இன்னும் சில மாதங்களில் ஈரானால் அணு ஆயுதங்கள் தயாரிக்க முடியும். இது இஸ்ரேலுக்கு ஆபத்து. அதனால்தான் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. ஈரான் மீதான தாக்குதல் தொடரும்.” என்றார்.

இஸ்ரேல் இராணுவ செய்தி தொடர்பாளர் லெப்டினனட் கர்னல் நடாவ் ஷோசானி கூறுகையில்,

“மத்திய கிழக்கில் தற்போதைய பதற்றத்துக்கு காரணம் ஈரான். அணு ஆயுதங்களை தயாரித்து இஸ்ரேலை அழிக்க ஈரான் திட்டமிடுகிறது. அதனால் தான், அணு ஆயுத தளங்களை குறிவைத்து துல்லிய தாக்குதல் நடத்தினோம். இஸ்ரேலில் மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல் நடத்துகிறது.” என்றார்.

இஸ்ரேல் பாதுகாப்பு துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் நேற்று கூறியபோது,

“ஈரானின் தாக்குதல் தொடர்ந்தால், அதற்கான கடும் விளைவுகளை ஈரான் மக்கள் சந்திப்பார்கள். தலைநகர் டெஹ்ரான் பற்றி எரியும்.” என்று தெரிவித்தார்.

இரு நாட்டின் தலைவர்களும் பரஸ்பரம் எச்சரிக்கை விடுத்துள்ளதால், மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

# அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியின் முக்கிய அரசியல்வாதி சுட்டுக் கொலை








அமெரிக்காவின்மினசோட்டாமாநிலத்தில் ஜனநாயகக் கட்சியின் முக்கிய அரசியல்வாதியான மெலிசா ஹோர்ட்மேன் மற்றும் அவரது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவமானது, அவர்களது வீட்டில் நேற்று இடம் பெற்றுள்ளது.

பொலிஸ் அதிகாரி போல வேடமணிந்து வந்த ஒருவர் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு, சந்தேக நபர் பொலிஸின் வாகனம் போன்ற ஒரு காரில் தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

அதே நேரத்தில், மாநில செனட்டராக இருக்கும் ஜோன் ஹோஃப்மேன் மற்றும் அவரது மனைவியும் தங்கள் வீட்டில் நடத்தப்பட்ட தனித்தனி தாக்குதலில் பல முறை சுடப்பட்டு, ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல்கள் அரசியல் காரணங்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர், குற்றவாளியை கைது செய்ய தீவிர தேடுதல் நடந்து வருகிறது.

கனடா முரசு
பக்கங்கள் 04
ஞாயிற்றுக்கிழமை 15/06/2025

## ஒரே ஆண்டில் இருமுறை அதிர்ஸ்டம் பெற்ற நபர்




கனடாவின் லெத்பிரிட்ஜ் நகரத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹில் என்பவர், இந்த ஆண்டில் இரண் 02

# கனடாவில் கொலை குற்றவாளிக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை



கனடாவில் இரண்டு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தைச் சேர்ந்த பிரஜை ஒருவருக்கு நீதிமன்றம் அதிரடி தண்டனை விதித்துள்ளது.

2022ஆம் ஆண்டு இடம்பெற்ற இரு தனித்தனி துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பாகவே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 03

# கனடா விஜயம் செய்கின்றார் மோடி; ஜி 7 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்



பிரதமர் நரேந்திர மோடி உத்தியோக பூர்வ விஜயமாக சைப்ரஸ், கனடா, குரோஷியா ஆகிய 3 நாடுகளுக்கு செல்கிறார். இதில் கனடாவில் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

“பிரதமர் நரேந்திர மோடி ஜுன் 15 முதல் 19 வரை சைப்ரஸ், கனடா, குரோஷியா ஆகிய 3 நாடுகளில் அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். 03



# அஹமதாபாத் விமான விபத்தில் தம்பியும் உயிரிழந்துவிட்டார்

## கனடாவில் வாழும் இந்தியப் பெண் தகவல்



கனடாவில் வாழும் இந்தியப் பெண் ஒருவருக்கு, இந்தியாவின் அஹமதாபாதில் நிகழ்ந்த ஏர் இந்தியா விமான விபத்தில் தன் தம்பியும் உயிரிழந்துவிட்டார் என்னும் அதிர்ச்சித் தகவல் கிடைத்துள்ளது.

கனடாவின் சஸ்காட்செவன் மாகாணத்தில் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர் இந்தியரான பியுஷ்குமார் பட்டேல்.

நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்று தன் மனைவி மற்றும் இரண்டு மகள்களுடன் சுநபயை வில் வாழ்ந்து வந்துள்ளார் பியுஷ்குமார்.

அவரது அக்காவான அஷினி பட்டேல் கனடாவில்தான் இருக்கிறார். இந்நிலையில், அஷினியை தொலைபேசியில் அழைத்த அவரது தாய், பியுஷ்குமார் ஏர் இந்தியா விமான விபத்தில் உயிரிழந்தது குறித்து தெரிவிக்க, அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளார் அஷினி.

தன் தம்பி அவரது நண்பர்களை சந்திப்பதற்காக இந்தியாவிலிருந்து லண்டன் சென்றது தனக்குத் தெரியும் என்று கூறியுள்ள அஷினி, ஆனால், அவர் விபத்துக்குள்ளான அந்த ஏர் இந்தியா விமானத்தில் இருந்தது தனக்கும் பியுஷ்குமாரின் மனைவி பிள்ளைகளுக்கும் தெரியாது என்கிறார்.

அஷினியும், பியுஷ்குமாரின் மனைவி பிள்ளைகளும் அவசரமாக இந்தியா புறப்பட்டுள்ளார்கள்.

பியுஷ்குமாரின் மகள்களில் ஒரு மகள் கடந்த சனிக்கிழமைதான் தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடினாள்.

ஆகவே, அவள் தன் தந்தையின் மரணச் செய்தியை எப்படி ஏற்றுக்கொள்வாளோ என்பது தெரியாததால், அவளிடம் பியுஷ்குமார் இறந்த செய்தியைச் சொல்லாமலே அவளை இந்தியாவுக்கு அழைத்துச் செல்கிறார்கள் அவளது தாயும் அத்தையும்.

## ஒரே ஆண்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டாவது முறையாக ஸ்கிராட்ச் அண்ட்வின் லொத்தர் சீட்டில் பெரிய தொகையை வென்று மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

அவர் கடந்த பெப்ரவரி மாதம் 10 டொலர் மதிப்புள்ள ஸ்கிராட்ச் டிக்கெட்டில் 200,000 டொலர் வென்றிருந்தார்.


தற்போது, போகர் லாட்டோ ஸ்கிராட்ச் டிக்கெட்டில் 100,000 டொலர்கள் மீண்டும் வென்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

முதலில் திரையில் என்ன வந்தது என்பதை நம்ப முடியவில்லை. மூன்று முறை ஸ்கேன் செய்தேன், பின்னர் கடைக்காரரையும் ஒருமுறை ஸ்கேன் செய்ய வைத்தேன்," என ஹில் தனது வெற்றியைப் பற்றி கூறியுள்ளார்.

முந்தைய வெற்றியின் போது, புதிய வாகனம் வாங்கி மீதமுள்ள தொகையை சேமிப்பதாக திட்டமிட்டிருந்த ஹில், இந்த முறை பெற்ற தொகையை வங்கியில் வைப்பு செய்து சற்று ஓய்வெடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

வெற்றி பெற்ற போகர் லாட்டோ டிக்கெட்டை, அவர் லெத்பிரிட்ஜில் ஹைலண்ட்ஸ் வீதியில் உள்ள சர்கிள் கே கடையில் கொள்வனவு செய்துள்ளார்.

# நீர்க் கட்டணத்தை பார்த்து அதிர்ந்துபோன முதியவர்




ஒட்டாவாவில் முதியவர் ஒருவர் பாரியளவு நீர்க் கட்டணம் கிடைக்கப் பெற்றதனால் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளார்.

ஒட்டாவா நகரைச் சேர்ந்த 68 வயதுடைய பால் மலூ என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டின' ஒரு கழிப்பறை கசிவால் 1,547 டொலர் நீர்க்கட்டணத்தை பெற்றதும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இது அவருடைய வழக்கமான கட்டணத்தைவிட 15 மடங்கு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டணத்தை பார்த்ததும் முதலில் சிரிப்பு வந்ததாகவும், வீட்டில் ஓர் நீச்சல் குளம் இருந்திருந்தாலும் இவ்வளவு கட்டணத் தொகை அதிகரித்திருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டப்படி கட்டணத்தை செலுத்த வேண்டும் என நகரசபை நிர்வாகம் தெரிவித்தள்ளது.

மலூயின், இது பற்றிய விளக்கம் கேட்க ஒட்டாவா நகரசபையை அணுகியபோது, அவரிடம் "இது நகரச் சட்டப்படி கட்டணமாகவே செலுத்தப்படவேண்டும் கட்டணத் தள்ளுபடி கிடையாது" என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், அவர் நகர முதல்வரின் அலுவலகத்துக்கும் புகார் அளித்துள்ளார். ஆனால் இதுவரை பதில் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

## கனடா விஜயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சைப்ரஸ் ஜனாதிபதி நிகோஸ் கிறிஸ்டோடவ்லிட்ஸ் அழைப்பின் பேரில், பிரதமர் மோடி ஜூன் 15, 16 ஆகிய இரு திகதிளில் சைப்ரஸில் பயணம் மேற்கொள்கிறார். 20 இற்கும் மேற்பட்ட ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் சைப்ரஸ் செல்வது இதுவே முதல்முறை. இப்பயணத்தில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக சைப்ரஸ் ஜனாதிபதியுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்துவார். மேலும் தொழில் அதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றுவார்.

இதையடுத்து கனடா பிரதமர் மார்க் கார்னி அழைப்பை ஏற்று, கனடாவில் ஜூன் 17, 18 ஆகிய திகதிகளில் நடைபெறும் வருடாந்த ஜி7 உச்சி மாநாட்டில் மோடி பங்கேற்கிறார். பிரதமர் மோடி பங்கேற்கும் 6 ஆவது ஜி7 உச்சி மாநாடு இதுவாகும்.

இந்த மாநாட்டில், எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், ஏ.ஐ. –ஆற்றல் இணைப்பு, குவாண்டம் போன்ற விடயங்களில் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து ஜி-7 தலைவர்கள், தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடுவார். உச்சி மாநாட்டுக்கு இடையில் பிரதமர் மோடி பல்வேறு தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளும் மேற்கொள்வார்.

இதையடுத்து குரோஷியா பிரதமர் ஆண்ட்ரேஜ் பிளென்கோவிக் அழைப்பின் பேரில் ஜூன் 19 இல் பிரதமர் மோடி அந்நாட்டில் பயணம் மேற்கொள்கிறார். இந்தியப் பிரதமர் ஒருவர் குரேஷியா செல்வது இதுவே முதல்முறையாகும். இப்பயணத்தில் பிரதமர் மோடி, குரேஷிய அதிபரை சந்திக்கிறார். குரேஷிய பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார். இந்திய பிரதமரின் இந்தப் பயணம் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாட்டுடனான இந்தியாவின் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா மேற்கொண்ட ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கைக்கு பிறகு பிரதமர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

## கனடாவில் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

39 வயதான ஜஸ்டின் போஸ் என்ற நபருக்கு, மொத்தமாக 19 ஆண்டுகள் சிறைத்தண்டனைக விதிக்கப்பட்டுள்ளது.


பிரிட்டிஷ் கொலம்பியாவின். உச்ச நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை இந்த தண்டனையை விதித்துள்ளது.


மார்ச் 25, 2022: 30 வயதான கோடி மொஸ்டாட் லாங்லியில் உள்ள ஓர் ஹோட்டலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

ஆகஸ்ட் 27, 2022: 37 வயது ட்ராய் ரெக்னியர் , சற்ரே நகரில் உள்ள 16600 ஆவது 19 ஆவது வீதியில் உள்ள வீடொன்றுக்கு வெளியே, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயரிழந்தார்.

இந்த இரண்டு கொலைகளுக்கும் முக்கிய சந்தேக நபராக போஸை, பொலிஸார் கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் திகதி கைது செய்தனர்.

அடுத்த நாளே, மொஸ்டாட் கொலைக்கு இரண்டாம் தர முற்பட்ட கொலை குற்றம் சாட்டப்பட்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு, ரெக்னியர் கொலைக்கும் அதே குற்றச்சாட்டும் தாக்கல் செய்யப்பட்டது.





# லாப்ரடோர் கடலில் வெளிவந்த பாரிய கறுப்பு நிற பனிப்பாறை

கனடாவின் லாப்ரடோர் கடற்கரை பகுதியில் கருப்பு நிறத்தில் பனிப்பாறை ஒன்று தென்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மிகவும் அரிதாக பார்க்கப்படும் இந்த பனிப்பாறை, வெளியில் வருவது உலக அழிவுக்கான எச்சரிக்கையாக கூட இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.

ஹல்லூர் அன்டோனியூசென் எனும் மீனவர், தனது படகிலிருந்து மீன் பிடித்துக்கொண்டிருந்த போது அவர் இந்த பனிப்பாறையை பார்த்திருக்கிறார். பார்ப்பதற்கு வித்தியாசமாகவும், விநோதமாகவும் இருக்கவே உடனே தனது செல்போனில் அதை படம்பிடித்துள்ளார்.

இந்த பாறை சுமார் மூன்று மாடி கட்டிடத்தின் சைஸில் இருந்ததாக கூறும் அவர், கருப்பு நிறத்தில் பனிப்பாறையை தன் வாழ்நாளில் இதற்கு முன்னர் பார்த்ததே இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார். அவர் சோஷியல் மீடியாக்களில் பகிர்ந்த புகைப்படம் தற்போது பரவலாக பகிரப்பட்டு வருகிறது.

சில ஆய்வாளர்கள் வித்தியாசமான விளக்கத்தை கொடுத்திருக்கின்றனர். கருப்பான பொருள் வண்டல் மண்ணாக இருக்கலாம். இந்த மண் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பனிப்பாறைக்குள் சரிந்து விழுந்திருக்க வாய்ப்பு இருக்கிறது.




இப்போது மீனவர் பார்த்த கருப்பு பனிப்பாறை, அதன் மொத்த அளவில் வெறும் 5 வீதம் தான். இந்த பாறையை மூடியிருந்த பனி முழுவதுமாக கரைந்துள்ளது என்று கூறியுள்ளனர்.

ஆனால், வண்டல் மண் எப்படி கடலில் மிதக்கும்? இந்த கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. வேறு சிலரோ, உலகம் முழுவதும் நடக்கும் மாற்றங்களை குறிப்பிட்டு, இந்த கருப்பு பனிப்பாறை அழிவின் அறிகுறி என்று கூறுகின்றனர்.

அதாவது இஸ்ரேல் – ஈரான் போர் அணு ஆயுத மோதலை தொடங்கும் என்றும், இந்த மோதல் உலகம் முழுவதும் அணு ஆயுத பயன்பாட்டை ஏற்படுத்தும் என்றும், அது உலகத்தை அழிக்கும் என்றும் கூறுகின்றனர். இதனை முன்கூட்டியே தெரியப்படுத்த தான் கருப்பு பனிப்பாறை தோன்றியிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

